**கேகாலை நகர சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கேகாலை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 77,684 தொகையான கடன் கொடுத்தோர் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 5,386,889 ஆக இருந்த போதிலும், அது ரூபா 969,120 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையினால், ஆண்டின் வருமானம் மற்றும் பெற வேண்டிய வருமானம் என்பன 4,417,769 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 46,012,033 ஆக இருந்த போதிலும், அதற்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரம் கூட்டுமொத்தம் ரூபா 3,157,792 ஆக இருந்தமையால் ரூபா 42,854,241 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

#### 1.3.3 தொங்கல் கணக்கு

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொங்கல் கணக்கின் செலவு மீதியான ரூபா 3,657 தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் 01 வருடத்தை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 22,333,466 ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் 01 வருடத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 20,143,945 ஆகும். செலுத்த வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை அபிவிருத்தி செய்வதற்கான ரூபா 10,000,000 மற்றும் வீதி அபிவிருத்திக்கான ரூபா 3,000,000 தொகையான நிறைவேற்றப்படாத பணிகளுக்கான ஒதுக்கீடுகளும் ஆகும்.

## 1.4 இனங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 76,625 | 06 மாதங்களை விஞ்சிய வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 15 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 2,682,487 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 1646 | 2,775,995 | சபைக்குச் சொந்தமான 21 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை - | சபையின் பொறுப்பில் உள்ள 16 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,882,387 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 42,086,583 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 12,227,000 | 12,227,000 | 11,814,738 | 2,637,989 | 11,575,000 | 11,575,000 | 10,725,410 | 4,631,408 |
| வாடகை | 41,041,582 | 41,689,820 | 41,875,578 | 3,933,411 | 38,815,060 | 38,154,860 | 46,031,746 | 3,665,891 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,656,500 | 2,592,000 | 3,167,284 | 470,120 | 1,749,500 | 1,715,000 | 812,032 | 134,840 |
| ஏனைய வருமானம் | 128,394,498 | 128,555,498 | 104,868,665 | 35,474,508 | 129,055,778 | 129,052,278 | 103,996,868 | 37,094,491 |

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது வீதவரியும் வரியும், ஏனைய வருமானம் என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வமானம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விட முறையே 03 சதவீதத்தாலும், 18 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்ததுடன் வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டண வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 02 சதவீதத்தாலும், 19 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.

#### 2.2.2 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏதாவது ஆதனவரியொன்று அல்லது ஏக்கர் வரியொன்று செலுத்தாமை தொடர்பாக அந்த வரியை அறவிடுவதற்குள்ள இடத்தின் உரிமையாளரின் ஆதனங்களை முடக்கி, விற்பனை செய்தேனும் பணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் காணி உரிமையாளர் மற்றும் 41 ஆதனவரி

இடங்களிலிருந்து 5 வருடம் முதல் 32 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 594,002 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த ஆதனவரிக் கட்டணத்தை அறவிடுவதற்காக 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனங்களை மதிப்பீடு செய்து அறவிடப்பட வேண்டிய போதிலும், 2001 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2017 ஆண்டிற்கும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. 15 வருடங்களுக்கு முன் காணப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் வரி அறவிடப்பட்டமையின் காரணமாக தற்போதைய பெறுமதியின் அடிப்படையில் வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒலகம நீச்சல் தடாகத்தின் முதலாவது கட்டத்திற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 8,865,977 செலவிடப்பட்டிருந்த போதிலும், இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்படாமையினால் தடாகம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையின் காரணமாக, செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினமாக இருந்தது. அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டிருந்த நீச்சல் தடாகத்தைச் சுற்றி காடு வளர்ந்திருந்ததுடன் தடாகத்தில் நீர் நிரம்பிக் காணப்பட்டதன் காரணமாக நுளம்புகள் பெருகும் அபாயம் காணப்பட்டது.

(ii) 2017 இன் பாதீட்டின் பிரகாரம் மூலதன செலவின விடயத்தின் கீழ் ரூபா 39,605,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு ரூபா 5,436,873 பெறுமதியான 08 வேலைகளுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது எந்த வேலையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017 இன் கீழ் நிதஹஸ் மாவத்தை சிறுவர் பூங்காவிற்காக ரூபா 2,209,498 கிரயமொன்றைச் செய்து நிர்மாண நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 22 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 மே வரையிலும் மக்கள் பயன்பாட்டிற்காகத் திறக்கப்படவில்லை.

**(ஆ) சுற்றாடல் பிரச்சினைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் மற்றும் சுகாதாரப் பிரிவின் நோக்கங்களுக்கிடையே 2016 ஆம் ஆண்டில் கேகாலை நகர எல்லையில் அறிக்கையிடப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்தால் குறைத்தல் இலக்காக இருந்தபோதிலும், 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 39 டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் நோயாளர்கள் 180 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பு 461 சதவீதத்தால் அதிகரித்ததை காணமுடிந்தது.

(ii) கேகாலை றத்தளம்பலாவத்தை பொது மலசலகூடம் வைத்தியசாலை சந்தி அருகில் பொது மலசலகூடம் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 மே வரையிலும் மூடப்பட்டிருந்தமையின் காரணமாக பொதுமக்களுக்கு பொது வசதிகளை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நகரசபை அதிகாரப்பிரதேசத்தில் நாளொன்றிற்கு 15 அல்லது 20 தொன் துண்டுக் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், அந்த துண்டுக் கழிவுகளிலிருந்து உக்காத பொருட்களை அகற்றுவதற்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை. கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு அருகில் சழிவுப்பொருட்கள் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் துண்டுக் கழிவுகள் சேகரிக்கப்பட்ட நிலம் மண் சரிவு அபாயத்திற்குட்பட்டிருந்தது.

(ii) கூட்டுப்பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற ஹலர் இயந்திரம் 2018 மே வரையிலும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டமையால் உர உற்பத்தி கைவிடப்பட்டிருந்தது.

(iii) கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுகின்ற நிலத்திற்கு உயிரினங்கள் நுழைய முடியாதவாறு பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருமானத்திற்கு எடுக்க வேண்டிய ரூபா 573,638 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நகர மண்டபத்தை ஒதுக்கும் போது, நாளொன்றிற்கு ரூபா 10,000 வைப்பாக பெற்று குறித்த பணி நிறைவடைந்ததன் பின்னர், குறித்த தொகையை வருமானத்திற்கு எடுத்து மீதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 520,750 தொகையினைத் தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் 02 உதிரிப்பாகங்கள் நீண்டகாலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் சபையின் ஆதன மெய்மையாய்வின் பிரகாரம் கேகாலை நகர சபைக்குரிய இதுவரையிலும் வெளிப்படுத்தப்படாத சபைக்குச் சொந்தமான 13 ஆதனங்கள் தொடர்பாக மெய்மையாய்வுச் சபையினால் வழங்கப்பட்ட அவதானிப்புக்கள் மற்றும் முன்மொழிவுகள் என்பன 2018 மே வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு நிதிஏற்பாடு மற்றும் நிதிஏற்பாடு மாற்றங்கள் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 58 செலவின விடயங்களில் கூட்டுமொத்தமான நிதிஏற்பாடு ரூபா 16,183,500 முழுமையாகவும் 76 செலவின விடயங்களில் கூட்டு மொத்தமாக நிதிஏற்பாடு ரூபா 50,199,040 இல் 30 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை கூட்டுமொத்தமாக ரூபா 66,382,540 தொகையும் சபை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) வைப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை. |
| | (ii) ஊழியர் கடன் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | இனங்காணப்படாத நிலையான சொத்துக்கள் காணப்பட்டமை. |
| (இ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | சபைக்கு அறவிட வேண்டிய நீண்டகால வருமான மீதி காணப்பட்டமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | நிதிஏற்பாட்டில் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் சேமிக்கப்பட்டிருந்தமை |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | செயற்பாடற்ற மற்றும் பழுதுபார்க்கப்பட வேண்டிய வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை. |